
ஓம் மஹா வாராஹி சக்தி





## ஸ்ரீ வாராஹி மந்த்ராலயத்தின், ஸ்ரீ ஜெய சூலினி துர்க்கை மற்றும் வன பத்ரகாளி அம்மன் திருக்கோவில்கள்

# மஹா கும்பாபிஷேக பெருவிழா

**நாள் : சித்திரை மாதம் 10ம் தேதி (23.04.2023) (அட்சய திரிதியை அன்று)**
**ஞாயிற்றுக்கிழமை காலை 7.30 மணி முதல் 9.30 மணிக்குள்**

பேரன்புடையீர்,

எல்லாம் வல்ல பராசக்தியானவள் எங்கும் நீக்கமற நிறைந்து வேண்டுவோர்க்கு வேண்டுவன தந்து பூ உலகை காக்கும் பொருட்டு இச்சா, ஞான, கிரியாய் சக்தியாய் அஷ்டசக்தியாய் பற்பல அவதாரம் பூண்டு நம்மை காத்து வரும் அகிலாண்ட கோடி பிரம்மாண்ட நாயகியாய் இப்பூவுலகில் அருளாட்சி செய்து வரும் ஸ்ரீ ஜெய சூலினி துர்க்கா தேவிக்கு தாய்லாந்து நாட்டு முறையில் கோபுரமும் மற்றும் ஸ்ரீ வனபத்ரகாளி அம்மன் கோவில்களுக்கு கல்கத்தா காளிகோவில் முறையில் கோபுரமும் அனைத்து ஆலயத் திருப்பணிகள் புதிதாக கற்ப கிரஹம் அர்த்த மண்டபம் அமைக்கப்பெற்று

நிகழும் மங்களகரமான சோபகிருது வருடம் சித்திரை மாதம் 10ம் தேதி (23.04.2023) ஞாயிற்றுக்கிழமை திரிதியை திதியும், சித்த யோகமும், ரோகினி நட்சத்திரமும், மீன லக்னமும், கூடிய நன்னாளில் காலை 7.30 மணி முதல் 9.30 மணிக்குள்





## தவத்திரு சாக்த ஸ்ரீ வாராஹி மணிகண்ட சுவாமிகளின்

தலைமையில் நடைபெற உள்ளது.

## நிகழ்ச்சி நிரல்

### சித்திரை மாதம் 8ம் தேதி (21.4.2023) வெள்ளிக்கிழமை

| | |
|---|---|
| காலை 7.00 மணி | ஸ்ரீ அனுக்ஞை ,விக்னேஸ்வர பூஜை<br>ஸ்ரீ மகா கணபதி ஹோமம், கோ பூஜை, அஸ்வ பூஜை<br>துர்க்கா ஹோமம், காளிகாம்பா ஹோமம், நவகிரக ஹோமம் |
| மாலை 4.30 மணி | கலச தீர்த்தம், முளைப்பாரிகை ஊர்வலம்<br>(கூ.கவுண்டம்பாளையம் மாரியம்மன் கோவிலில் இருந்து |
| மாலை 6.00 மணி | ரஷோக்ன ஹோமம் நட்சத்திர ஹோமம் அங்குரார்ப்பணம் ரக்ஷா பந்தனம்<br>பிரேவசபலி, கலச ஸ்தாபனம், கும்பாலங்காரம் முதல் கால யாக பூஜை<br>தீபாராதனை, பிரசாரம் வழங்குதல். |

### சித்திரை மாதம் 9ம் தேதி (22.4.2023) சனிக்கிழமை

| | |
|---|---|
| காலை 8.30 மணி | இரண்டாம் கால யாக பூஜை கணபதி பூஜை துர்க்கா ஹோமம் காளிகாம்பாள் ஹோமம் பூர்ணாஹூதி பிரசாதம் வழங்குதல். |
| மாலை 6.00 மணி | மூன்றாம் கால பூஜை மஹா கணபதி பூஜை துர்க்கா ஹோமம் காளிகாம்பா ஹோமம், யந்த் ரஸ்தாபனம் அஷ்டபந்தனம் சிலை பிரதிஷ்டை |

### சித்திரை மாதம் 10ம் தேதி (23.4.2023) ஞாயிற்றுக்கிழமை

| | |
|---|---|
| காலை 6.00 மணி | மகா கணபதி ஹோமம், துர்க்கா ஹோமம், காளிகாம்பா ஹோமம், நாடி சந்தானம், பூர்ணாஹூதி தீபாராதனை |
| காலை 7.30 மணி | ஸ்ரீ ஜெய சூலினி துர்க்கை அம்மன் வன பத்ரகாளி அம்மன் கோவில் |
| 9.30 மணிக்குள் | கோபுரங்களுக்கு கலச தீர்தாபிஷேகம் |
| 10.30 மணிக்கு | அபிஷேகம் |
| 12.30 மணிக்கு | தச தரிசனம் |

கோவையில் 33 ஆண்டுகளுக்கு முன்னாலேயே சௌரிபாளையத்தில் வாராஹி அன்னைக்கு சாக்த ஸ்ரீ வாராஹி மணிகண்ட சுவாமிகள் ஆலயம் அமைத்து வழிபாடுகள் நடத்தி வந்தார். இப்பொழுது இந்தக் கோவிலில் வாராஹி அம்மன் திவ்யமாக அருளாட்சி செய்து வருகிறாள். அந்த அம்மனுக்கு மிகப் பிரம்மாண்டமான ஆலயம் அமைக்க வேண்டும் என்று முயற்சி எடுத்து கோவை பெரிய நாயக்கன்பாளையம் பகுதியில் உள்ள கூடலூர் கவுண்டம்பாளையத்தில் UIT கல்லூரிக்கு அருகில் அமைந்துள்ள 7 ஏக்கர் பரப்பளவு கொண்ட ஒரு தென்னம்தோப்பில் ஸ்ரீ வாராஹி மந்த்ராலயத்தின் வாராஹி பீடத்தில் ஸ்ரீ வாராஹி அம்மன் ஸ்ரீ நவசக்தி வாராஹி அம்மனாக அருளாட்சி செய்து வருகிறாள். இந்த அன்னையின் பேரருளாள் அனேக பக்தர்கள் குடும்ப கஷ்டங்களிலிருந்தும் நோய்களிலிருந்தும் தொழில் நஷ்டங்களிலிருந்தும் விடுபட்டு சிறப்பான வாழ்க்கையை பக்தர்களுக்கு ஏற்படுத்தி தருகிறாள். இந்த ஆலயத்திற்குள் நுழைந்து வாராஹி அன்னையை தரிசனம் செய்தாலே பக்தர்களின் பிரச்சனைகளுக்கு தீர்வு எளிமையாக கிடைக்கிறது என்பது வருகின்ற பக்தர்களின் அனுபவங்களாகும்.

மாந்திரீகம் தகடு தாயத்து போன்ற வியாபாரங்களின்றி தூய்மையான ஆன்மீகப் பாதையில் இறைநம்பிக்கை ஒன்றால் மட்டுமே எந்தவித பிரச்சனைகளையும் தீர்க்க முடியும் என்பதை வரும் பக்தர்களுக்கு உணர்த்தி வழங்கப்படுகின்ற எலுமிச்சம்பழம் குங்குமம் தீர்த்தம் பிரசாதங்கள் ஆகியவற்றாலே பக்தர்களுக்கு நிறைவை ஏற்படுத்தி தருகிறார் சாக்த ஸ்ரீ வாராஹி மணிகண்ட சுவாமிகள். இந்த வராகி பீடத்தில் வருகை தருகின்ற பக்தர்கள் தங்கள் வாழ்க்கையின் பெரும் நிம்மதி பெறுவார்கள் என்பது திண்ணம். ஒவ்வொரு அஷ்டமியிலும் 8 அடி உயரத்தில் அமைந்துள்ள கால பைரவருக்கும் கோவிலை சுற்றி அமைந்துள்ள 8 பைரவர்களுக்கும் நடக்கின்ற வழிபாடுகள் பக்தர்களின் குறைகளை பூரணமாய் தீர்த்து வருகிறது. 12 அடியிலுள்ள சங்கடம் தீர்க்கும் சனீஸ்வரர் ஆலயம் பக்தர்களின் மங்கு சனி பொங்கு, சனி அஷ்டமச் சனி, 7½ சனி மற்றும் ஜாதகத்தில் அமைந்துள்ள சனி தோஷங்களுக்கு நிவர்த்திகாணும் முகமாக ஒவ்வொரு வாரமும் சனிக்கிழமையன்று சனீஸ்வர பகவானுக்கு அபிஷேக அலங்கார ஆராதனைகள் நடத்தப்பட்டு மக்களின் சனி தோஷங்களுக்கு நிவர்த்தி காணப்படுவதோடு பக்தர்களே சனிஸ்வருக்கு நல்லெண்ணெய் அபிஷேகம் அவர்கள் கையில் செய்யும் வாய்ப்புக்களும் இங்கு வழங்கப்படுகிறது. எண்ணெய் அபிஷேகம் செய்பவர்களுக்கு கை, கால் வலி, இடுப்புவலி, மூட்டுவலி ஆகியவற்றிற்கான மூலிகை எண்ணெய்களும் வழங்கப்படுகின்றது.

பக்தி கணபதி ஞானஸ்கந்தன் ஆகிய தெய்வங்களின் ஆலயங்கள் இங்கு வராகி பீடத்தில் அருளாட்சி செய்து வருகிறார்கள். ஒவ்வொரு பௌர்ணமிக்கும் பக்தர்களின் வறுமை நிலை, கடன் தொல்லை, துரதிஷ்ட சூழ்நிலைகள் அகல அன்னை ராஜராஜேஸ்வரிக்கு ஸ்ரீ சக்ர மஹா மேரு பூஜைகளும் வழிபாடுகளும் சிறப்பாக செய்யப்படுகின்றன.

52 ஆண்டு கால சபரிமலை யாத்திரை அனுபவம் கொண்ட வாராஹி சுவாமிகளால் உருவாக்கப்பட்ட ஸ்ரீ தர்மசாஸ்தா சபரிமலை ஐயப்பன் ஆலயம் வருகை தரும் பக்தனுக்கு மன நிம்மதியை கொடுக்கும் வகையில் ஐயப்பன் அருளாட்சி செய்து வருகிறார்.

கோவையில் மிகப் பெரிய சக்தி பீடமாக ஸ்ரீ வராகி பீடம் அமைய வேண்டும் என்ற ஸ்ரீ வாராஹி சுவாமிகளின் நோக்கத்தின்படி 16 அடி உயரத்தில் ஸ்ரீ வாராஹி அம்மன் சிலை மாமல்லபுரத்தில் உருவாக்கப்பட்டு பாதாள வாராஹி அம்மனுக்கு பூமிக்கு அடியே திருக்கோவில் உருவாக்கும் பணிகள் நடந்து வருகின்றன. ஆதிசங்கரர் வகுத்துக் கொடுத்த இந்து சமயத்தில் கணாபத்யம் கௌமாரம், சௌரம், சைவம், வைணவம், சாக்தம் ஆகிய அறுவகை சமயங்களுக்கும் ஆலயம் அமைப்பது சுவாமிகளின் நோக்கமாகும். சித்தர்களின் ஞானத்தவக்குடில் ஆகியன அமைப்பதும் அதன் மூலம் பக்தர்களுக்கு தாங்கள் விரும்பும் தெய்வத்தின் முன் நின்று வழிபாடுகள் செய்யவும் வாராஹி பீடம் முயற்சித்து வருகிறது.

இந்த முயற்சியின் பயனால் அனைத்து இராகு கால நேரத்திலும் பக்தர்களுக்கு சிரமங்களை விலக்கி வெற்றி தரக் கூடிய ராகுகால துர்கா வழிபாட்டிற்க்காகவே ஸ்ரீ ஜெய சூலினி துர்க்கா தேவி சிலையை 12 அடி உயரத்திலே தனி ஆலயமாக அமைத்தும், வாழ்க்கையில் எதிரிகள் தொல்லையில்லாமலும் பகைவர்கள் பயம் இல்லாமலும் எந்த தோஷங்களையும் விலக்கி வல்லமை படைத்த, நன்மை அளிக்கும் பராசக்தியான அம்பிகையின் மறுவடிவமாக விளங்கும் ஸ்ரீ வனபத்ரகாளி அம்மனுக்கும் 10 அடி உயரத்தில் சிலையும் தனி ஆலயமும் அமைத்து ஒவ்வொரு அமாவாசையும் பிரதிவாரம் செவ்வாய் வெள்ளியும் வேப்பிலை மாலை சாத்துவோருக்கு வேண்டும் வரங்களை தருகின்ற வனபத்ர காளி அம்மன் கோவிலுக்கும் வருகின்ற ஏப்ரல் மாதம் 23ம் தேதி 2023ம் வருடம் கும்பாபிஷேகம எனும் திருக்குட நன்னீராட்டுப் பெருவிழா சீரோடும் சிறப்போடும் நடைபெற உள்ளது.

இத்தகைய சிறப்பு வாய்ந்த ஆலய கும்பாபிஷேக விழாவிற்கு பக்தர்களை வருக வருக என வரவேற்பதில் ஸ்ரீ வாராஹி மந்தராலய வாராஹி பீடம் மகிழ்வு கொள்கிறது.

**பக்தர்கள் அனைவரும் வருக! நல்லருள் பெருக!**

**ஸ்ரீ வாராஹிமந்த்ராலயம் டிரஸ்ட், சாமிதோட்டம், ஸ்ரீ பாரதி நகர், UIT கல்லூரி அருகில்,**
**கூ. கவுண்டம்பாளையம், பெரியநாயக்கன்பாளையம், கோவை – 641 020.**
**தொடர்புக்கு: 0422-7140071, 99655 20108, 92444 21389.**